# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2079/2 - 2018 ජූලි මස 09 වැනි සඳුදා - 2018.07.09

*2079/2 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

மதுவரி அறிவித்தல்

*திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ், கௌரவ நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தி, 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில், மரங்களைச் சீவுவதற்கான உரிமப்பத்திரக் கட்டணம் என்ற 2018.04.09 ஆந் திகதிய 2066/2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு 2018, யூன் மாதம் 21 ஆந் திகதியன்று பாராளுமன்றத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என இத்தால் அறியத்தருகின்றது.*

ஆர். எச். எஸ். சமரதுங்க,
செயலாளர்,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2018, யூலை 09.*

**மரங்களைச் சீவுவதற்கான உரிமக் கட்டணம்**

| | *கூட்டுறவு முறையின்கீழ் ரூபா* | *கூட்டுறவு அல்லாத முறையின் கீழ் ரூபா* |
|---|---|---|
| (I) ஆண் பனை மரம் (மரம் ஒன்றுக்கு) | *10.00* | *25.00* |
| (II) பெண் பனை மரம் (மரம் ஒன்றுக்கு) | *25.00* | *50.00* |
| (III) தென்னை மரம் ஒன்றுக்கு | *25.00* | *50.00* |

*2.* (i) பதனிடுவதற்காக தென்னை மர சீவலுக்கான குடிசைசார் உரிமம் (மரம் ஒன்றிற்கு) : ரூபா 50.00
(i) பதனிடுவதற்காக தென்னை மர சீவலுக்கான வர்த்தக உரிமம் (மரம் ஒன்றிற்கு) : ரூபா 100.00

*3.* பொருட் கோடல் :
"கூட்டுறவு முறையின்கீழ்" என்பது, மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது கொத்தணி எனப் பொருள்படும்.

*08-306*


1A - PG 4136 — 77 (2018/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.